[பேரவைத் தலைவர்] [1995 மே 2

(1) I have the honour to inform that Thiru Palur V. Sampath, Member of the Legislative Assembly, Vaniyambadi Constituency was arrested on 30-4-1995 at 21.30 hours at Hindu Higher Secondary School, Ambur vide Ambur Town Police Station Crime No.267/95 under section 151 Cr.P.C read with 7(1)(a) CLA Act and he is being sent for remand.

(2) Thiru. K.A. Manoharan, MLA (Congress), Hosur Constituency, along with others, were arrested today, 2-5-1995, at 02.00 hours at Hosur in connection with forthcoming `bundh' on 4-5-1995 vide Hosur Town Police Station Crime No.342/95 under section 151 Cr.P.C. read with 7(1)(a) CLA Act. They are being sent for remand (குறுக்கீடு).

முற்பகல் 11-15

3. தகவல் கோரல்

அனுமதி மறுக்கப்பட்ட பிரச்சினையைக் (4-5-1995 அன்று எதிர்க்கட்சிகள் நடத்தவுள்ள "பந்த்" தொடர்பாக கைது) குறித்து அவையில் எழுப்புதல்—பேரவைத் தலைவர் தீர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பரிதி இளம்வழுதி உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்ததையும் எடுத்துக் கொள்கிறேன் என்றுதான் சொல்கிறேன். உட்காருங்கள். சேப்பாக்கம் பகுதியில் குடிசைமாற்று வாரிய குடியிருப்பில் உள்ள புவனேஸ்வரி என்பவர் தாக்கப்பட்டது குறித்த பிரச்சினையை ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கடந்த வெள்ளிக்கிழமை திரு. பரிதி இளம்வழுதி என்னிடத்திலே ஒரு அறிவிப்பு கொடுத்து இருந்தார். இன்றைக்கு எடுத்துக்கொள்ளப் போவதாக அன்றைக்கே அறிவித்து இருந்தேன். புவனேஸ்வரி என்பவர் தாக்கப்பட்டது பற்றிய பிரச்சினையை மட்டும் சிறப்புக் கவன ஈர்ப்பாக இன்று எழுப்ப அனுமதிக்கிறேன். அதைப்பற்றி எழுப்பலாம். இது தன்னுடைய தொகுதி சம்பந்தப்பட்டது என்கிற காரணத்தால் திருமதி ஜீனத் சர்புதீன் அவர்களும் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். திரு. பரிதி இளம்வழுதியிடம் இன்றைக்கு எடுத்துக் கொள்வதாக அன்றைக்கே அறிவித்தேன். ஆகவே, அதை இன்றைக்கு எடுத்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்) உங்களுடைய அறிவிப்பை நான் எடுத்துக்கொள்ளவில்லை. (குறுக்கீடுகள்) திரு. குமாரதாஸ் நீங்கள் எந்த அறிவிப்பையும் கொடுக்கவில்லையே; நீங்கள் ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) நீங்கள் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், நீங்கள் கொடுத்திருக்கிற அறிவிப்புக்கு நான் அனுமதி மறுத்திருக்கிறேன். அனுமதி

மறுக்கப்பட்ட பிரச்சினையை இங்கே எழுப்ப முடியாது. (குறுக்கீடுகள்) வெளியிலே தவறு செய்கிறவர்களைப் பற்றி (குறுக்கீடுகள்) காவல் துறையினர் அந்தமாதிரி ஒரு முயற்சி இருக்கிறது என்று அவர்கள் சந்தேகிக்கிறபோது, அவர்களுக்கு கைது செய்வதற்குரிய அதிகாரம் இருக்கிறது. நம்முடைய விதிகளின்படி கைது செய்யப்பட்டவுடன் நமக்கு அந்தத் தகவலைத் தரவேண்டும். அந்தத் தகவலை முறைப்படி கொடுத்து இருக்கிறார்கள். அதை நான் அவைக்கு அறிவிக்கிறேன். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது எழுந்து நின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் ஏதோ காவல் துறையினர் 'இன்டிஸ்கிரிமினேட்'-ஆக சில அரஸ்ட்டுகளை செய்துகொண்டு இருக்கிறார்கள் என்று இங்கே பேசினார்கள். அது தவறு. வருகிற 4-ஆம் தேதி எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து தமிழகத்தில் ஒரு பந்த், பொது வேலைநிறுத்தம் நடத்தப் போவதாக அறிவித்து இருக்கிறார்கள். கடையடைப்பு செய்யப் போவதாகவும் எதிர்க்கட்சிகள் அறிவித்து இருக்கிறார்கள். அரசுக்கு, காவல் துறைக்கு கிடைத்த நம்பகமான தகவல்கள், இந்த 4-ஆம் தேதி பந்த் என்ற பெயரில் எதிர்க்கட்சிகள் பரவலாக வன்முறை நிகழ்ச்சிகளை தமிழகத்தில் தூண்டிவிட வேண்டும்; எப்படியேனும் வன்முறையை ஏற்படுத்தி சிலராவது இதில் அடிபட்டு சாகவேண்டும்; இதனால் இந்த மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று பறைசாற்றி அதன்பேரில் இந்த அரசாங்கத்தை டிஸ்மிஸ் செய்ய வேண்டும் என்று கோரவேண்டும்; இதற்காக ஆளுநரை, மத்திய அரசுக்கு சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது; இந்த அரசாங்கத்தை உடனே டிஸ்மிஸ் செய்யுங்கள் என்று ஓர் அறிக்கையை அனுப்பச் செய்யவேண்டும் என்றெல்லாம் திட்டமிட்டுக்கொண்டு இருக்கிறார்கள் என்ற நம்பகமான தகவல்கள் அரசுக்கும் காவல் துறைக்கும் கிடைத்து இருக்கின்றன. அரசியல் நோக்கங்கள், உள்நோக்கங்கள் எப்படியிருப்பினும், இந்த மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கை நிலைநாட்ட வேண்டியது, அமைதியைக் காக்க வேண்டியது காவல்துறையின் பொறுப்பாகும், கடைமையாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கடமையை நிச்சயமாகக் காவல் துறை சரிவர நிறைவேற்றும்.

முற்பகல் 11-20

இப்பொழுதே எதிர்க்கட்சிகளைச் சார்ந்த சிலர் ஆங்காங்கே கடை நடத்துபவர்களிடம் சென்று 4-ஆம் தேதி நீங்கள் கடையை மூடாவிட்டால் இனி என்றைக்குமே நீங்கள் கடையை நடத்த முடியாத அளவிற்கு இங்கே வன்முறையைக் கட்டவிழ்த்து விடுவோம் என்றெல்லாம் மிரட்டுவதாகத்

தகவல்கள் வந்திருக்கின்றன. இப்படி., regarding those who are indulging in incitement to volience. the police have a duty to take preventive action.

அதுமட்டுமின்றி சிலர் இப்பொழுது குறிப்பிட்ட செக்சன்களின் கீழ் வரக்கூடிய குற்றங்களைப் புரிந்து கொண்டிருப்பதாகக் காவல்துறையினருக்குக் கிடைத்த தகவல்களின்பேரில், ஆங்காங்கே நடைபெற்ற சம்பவங்களின் பேரில் ஐ.பி.சி.யின் குறிப்பிட்ட செக்ஷன்களின்கீழ் சிலர் அரெஸ்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். இது காவல்துறையினர் எடுத்துள்ள சட்டப்படியான நடவடிக்கையாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலமைச்சரவர்கள் தெரிவித்த கருத்தைத்தான் நானும் உங்களுக்குத் தெரிவித்து. அதுபற்றி இங்கே அவையில் எழுப்ப முடியாது; காவல்துறையினர் சட்டப்படி ஒரு நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள்; (குறுக்கீடு) சட்டப்படி ஒரு நடவடிக்கையை எடுத்திருக்கிறபொழுது அந்த நடவடிக்கை எனக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப்பிறகு இதுபற்றிப் பேச முடியாது. (குறுக்கீடு) சரி, சரி. ரொம்ப அநியாயம் என்று சொல்லிவிட்டீர்கள்.

இப்போது இன்னொன்றைச் சொல்கிறேன். இதையும் கேட்டுக் கொள்ளுங்கள்.

1960-வது ஆண்டு இந்தப் புண்ணிய பூமியை யார் ஆண்டார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். (குறுக்கீடு) தெரியும் அல்லவா? உங்களுடைய காங்கிரஸ் கட்சிதான் ஆண்டது. அந்த நேரத்தில் (குறுக்கீடு) இருங்கள், சொல்லிவிடுகிறேன். உட்காருங்கள். இந்தப் புண்ணிய பூமியிலே 1960-இலே என்ன நடந்தது என்பதையெல்லாம் சொல்லிவிடுகிறேன்.

திரு. எம். கல்யாணசுந்தரம் அவர்கள் சட்டமன்ற விடுதிக்குள்ளேயே (குறுக்கீடு) சட்டமன்ற விடுதிக்குள்ளேயே சென்று திரு. கல்யாணசுந்தரம் அவர்களை 1960-இல்-அன்றையதினம் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தான் முதலமைச்சர் - சட்டமன்ற விடுதிக்குள்ளேயே இதே 151-வது செக்சனிலே கைது செய்திருக்கிறார்கள். சட்டமன்ற விடுதிக்குள்ளேயே ஒரு சட்டமன்ற உறுப்பினர் கைது செய்யப்பட்டார் என்பதை இங்கே எழுப்பிய நேரத்தில் அன்றைக்கு இருந்த பேரவைத் தலைவர் - இந்தப் பேரவைத் தலைவர்தான் அநியாயம் என்று சொல்லிவிட்டீர்கள் - அன்றைய பேரவைத் தலைவர் என்ன சொல்லியிருக்கிறார்கள் தெரியுமா? (குறுக்கீடு) அன்றைய பேரவைத் தலைவர் திரு. யூ. கிருஷ்ணாராவ் அவர்கள் இந்தப் பேரவையிலே சொல்லியிருக்கிறார்.

``....A Member of this Assembly, therefore cannot be arrested under civil process and if a Member is arrested under Criminal process or if a Member is arrested under emergency Legislation, the House has to be informed of the cause of arrest. That is all. அதற்குப் பிறகு சொல்லுகிறேன். அப்படி 151-இல் ஒரு சட்டமன்ற உறுப்பினரோ மற்றவர்களோ கைது செய்யப்பட்டால், கைது செய்யப்பட்ட விவரத்தை இந்தப் பேரவைக்குத் தெரிவிக்க வேண்டும். இரண்டு உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள்; இந்தப் பேரவைக்குத் தெரிவித்திருக்கிறார்கள். (குறுக்கீடு)

திரு. ஞானசேகரன் அவர்கள் கைது செய்யப்பட்டார் என்கிற செய்தியையும் தெரிவித்திருக்கிறார்கள்; உடனே அவர் ஜாமினில் வந்து விட்டார் என்கிற அந்தச் சிறப்புச் செய்தியையும் எனக்குச் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) அதுவும் வந்திருக்கிறது. ஆகவே, உடனே - நீங்கள் கைது செய்யப்பட்டு உடனே விடுவிக்கப்பட்டுவிட்ட காரணத்தாலே நான் பேரவைக்கு அறிவிக்கவில்லை.

(முற்பகல் 11-25

இந்த 151-இல் அவர் சொல்கிறார் - திரு. யூ. கிருஷ்ணாராவ் - அநியாயம் என்று சொல்கிறீர்களே -

" A Police-officer knowing of a design to commit any cognizable offence may arrest, without orders from a Magistrate and without a warrant, the person so designing, if it appears to such officer that the commission of the offence cannot be otherwise prevented``. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தெரிவித்தார்களே, அப்படி கைது செய்யப்படவில்லை என்று சொன்னால், ஒரு குற்றத்தைச் செய்ய இருக்கிறார்கள் என்பது காவல்துறை அதிகாரிக்குத் தெரிந்துவிடுமேயானால் அவர், இது நடக்கப் போகிறது என்று அவருடைய கவனத்திற்கு வந்துவிடுமேயானால் - காக்னிசபிள் அஃபென்ஸ் - அவர் காக்கினிசபிலுக்குள் வந்துவிட்டதினாலே வாரண்ட் இல்லாமல்கூட இந்த 151-ன்படி கைது செய்யலாம் என்பதை அன்றைய திரு. யூ. கிருஷ்ணாராவ், இந்தப் புண்ணிய பூமியை, மாண்புமிகு பெரும் தலைவர் காமராஜ் அவர்களின் ஆண்ட நேரத்தில் இருந்த பேரவைத் தலைவர் சொன்னார். நான் சொன்னால் அநியாயம் என்பீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகும் சொல்கிறார், அதேப் பிரச்சினையிலே, " Arrest under this Section is to prevent a person from committing a congnizable offence. If the person is not arrested, then the offence may be committed. The arrest, therefore, is to prevent a person from committing a cognizable offence. The question is, whether immunity from arrest extends to

such a case." என்று குறிப்பிட்டு இந்த மாதிரி கைது செய்வதற்கு இம்யூனிட்டி இருக்கிறதா என்பதையும் சொல்லிவிட்டு, அவர் சொல்கிறார் "The Hon.Member Sri M. Kalyanasundaram has also contended that he has been arrested within the immunity period of 40 days. This immunity period applies only for arrests under civil process. As the arrest of Sri M. Kalyanasundaram was not under civil process, there is no immunity period." சட்டமன்ற உறுப்பினரை கைது செய்யலாகாது என்பது சிவில் சம்பந்தப்பட்ட குற்றங்களுக்குத்தானே யொழிய கிரிமினல் சம்பந்தப்பட்ட குற்றங்களுக்கு அல்ல. அது கிரிமினல் சம்பந்தப்பட்ட குற்றம் என்கிற காரணத்தினாலே அந்த இம்யூனிட்டியை திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் Claim பண்ண முடியாது என்று அன்றைய பேரவைத் தலைவர் சொல்லியிருக்கிறார். அநியாயமா? (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அதற்குப் பிறகும் பேரவைத் தலைவர் கடைசியிலே பின்வருமாறு கூறி அன்றைக்கு முடித்திருக்கிறார். Sri Kalyanasundaram's contention that he must be informed of the reasons for his arrest is not correct. காரணம் சொல்ல வேண்டுமென்று திரு. கல்யாணசுந்தரம் கேட்டிருப்பதும் "is not correct" என்று குறிப்பிட்டுவிட்டு "The only condition is that the House should be informed of the cause for the arrest and that the Member is detained from service in the House. The house is to be informed through the Speaker and this has been done in this case." இந்தப் பேரவைக்கு கைது செய்யப்பட்ட விவரத்தை உடனடியாகத் தெரிவிக்க வேண்டும். அது இதிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு இதிலே எந்தப் பிரச்சினையும் இல்லையென்று 23-8-1960-ல் திரு. யூ. கிருஷ்ணாராவ் அவர்கள் இதே பேரவையிலே அறிவித்த அறிவிப்பு. எனவே, இதிலே, எந்த வகையிலேயும் உரிமைப் பிரச்சினையும் இல்லை, இதுபற்றி மேற்கொண்டு, இதிலே ஏதோ வழிமுறைகள் சரியாகப் பின்பற்றப்படவில்லை என்ற விவாதத்திற்கும் இடமில்லை. எனவே, நான் அனுமதி மறுத்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நீங்கள் கூறியதன் தொடர்பாக ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். திரு. ஞானசேகரன், சட்டமன்ற உறுப்பினரை காவல் துறையினர் preventive arrest செய்துள்ளனர். அவரால் பிரச்சினை ஏற்படும் என்று காவல் துறையினருக்குக் கிடைத்த நம்பகரமானத் தகவலின் அடிப்படையில்தான் சட்டப்படி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர் ஒரு வழக்கறிஞர் என்பதால்தான் சில வழக்குகளில் ஆஜராக வேண்டுமென்று நீதிபதி முன்பு அவர் கேட்டுக் கொண்டதால் அவருக்கு ஜாமின்

கொடுக்கப்பட்டுள்ளது. அதுவும் சட்டப்படியான நடவடிக்கையாகும். இப்போது, வன்முறையைத் தூண்ட நினைப்பவர் களுக்கு ஒரு எச்சரிக்கையை வி'டுக்கிறேன். 4-ஆம் தேதி இந்த பந்த்தை ஆதரிக்காத பொது மக்களுக்கும், கடை உரிமையாளர்களுக்கும், அனைவருக்குமே எந்தவிதமான இடையூறும், தொல்லையும், தொந்தரவும் ஏற்படாமல் அமைதி காக்க வேண்டியது, சட்டம், ஒழுங்கை நிலை நாட்ட வேண்டியது, காவல் துறையின் கடமையாகும். காவல் துறை இந்தக் கடமையை முழுமையாக நிறைவேற்றும், கடுமையாக நிறைவேற்றும். (மேசையைத் தட்டும் ஒலி) இதில் ஒன்றைக் கவனித்தாக வேண்டும். இந்த 'பந்த்'-தை அறிவித்தவர்கள், அதற்கான காலவரம்பை அறிவிக்கவில்லை. பொதுவாக ஒரு பந்த்தை அறிவித்தால், காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை என்று ஒரு காலவரம்பை அறிவிப்பார்கள். ஆனால், இந்த முறை எதிர்க்கட்சிகள் அத்தகைய எந்தக் காலவரம்பையும் அறிவிக்கவில்லை. ஆகவே, இப்போதே நான் எச்சரிக்கிறேன்.

3-ஆம் தேதி இரவிலிருந்தே வன்முறைக்கு வித்திட நினைப்பவர்கள், வன்முறைச் சம்பவங்களை ஏற்படுத்த நினைப்பவர்கள், சட்டவிரோதமான செயல்களில் ஈடுபட நினைப்பவர்கள், யாராக இருந்தாலும் அவர்கள் மீது காவல் துறையினர் கடுமையான நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் இவ்வளவு சொன்னேன். (குறுக்கீடுகள்) 4-ஆம் தேதி நீங்கள் பந்த் நடத்துவது பற்றியோ, வன்முறைகளில் இறங்குவது பற்றியோ எல்லாம் நீங்கள் எடுத்துக்கொள்கிற முடிவு. ஆனால் இங்கே எழுப்ப வேண்டும் என்று அறிவிப்பு கொடுத்த உறுப்பினர்களுக்கு நான் சொன்ன பதில் இது (குறுக்கீடுகள்) நான் மட்டுமல்ல, 1960-ல் இதே பிரிவென்டிவ் அரஸ்ட்-ஐ இந்தப் பேரவை வளாகத்திற்குள்ளே அதாவது விடுதியிலே செய்த நேரத்திலே கூட அன்றைய பேரவைத் தலைவர் அறிவித்திருக்கிற ஒரு அறிவிப்பைத்தான் நான் சொல்லியிருக்கிறேன். எனவே அதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் கட்சி நடத்தலாம். கட்சி நடத்தினால் அதற்காக வன்முறைக்கு வித்திடுவதை எப்படி, எந்த அரசு அனுமதிக்கும்? (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையினருக்கு சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட வேண்டிய கடமை இருக்கிறது. அந்தக் கடமையை அவர்கள் செய்யக்கூடாது

என்று எப்படிச் சொல்ல முடியும்? இப்போது செய்திருக்கிற அரஸ்ட் They are preventive arrests made by the police under Section 151 Criminal Procedure Code read with Section 7(1)(a) of the Criminal Law Amendment Act.

The provisions of Criminal Law Amendment Act gives the power for remanding, as that itself is treated as an offence. அதற்கு மேல் ஸ்பெஸிஃபிக் அஃபன்ஸஸ். அதாவது குறிப்பிட்ட குற்றங்களைச் செய்பவர்களை they are arrested under the appropriate Sections of I.P.C.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது வேறு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னது, அன்றைக்கு நீங்கள் செய்ய இருக்கிற குறிப்பிட்ட குற்றங்களுக்காக நடவடிக்கை எடுக்க இருப்பது பற்றியது. ஆனால் இன்றைக்கு இங்கே எழுப்பப்பட்ட பிரச்சினைக்கு, முந்தைய காலத்தில் பேரவைத் தலைவர் சொன்னதை நான் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) அவரைக் கைது செய்யாமல் விட்டால் அந்தக் குற்றம் நிகழ்ந்துவிடும். அதுதான் அவர் சொல்லியிருப்பது. அதாவது அவரைக் கைது செய்யாமல் விட்டால் அத்தகைய குற்றம் நிகழ்ந்துவிடும் என்பதால் அப்படிக் கைது செய்வது என்பது (குறுக்கீடுகள்) அதை வழக்கு மன்றத்தில் போய்ப் பாருங்கள் (குறுக்கீடுகள்) நீங்கள் வன்முறையைத் தூண்டுகிறீர்களா இல்லையா என்பது வேறு. (குறுக்கீடுகள்) வன்முறை தூண்டப்படும் என்கிற ஒரு ஐயம் காவல் துறை அதிகாரிக்கு வந்துவிடுமேயானால் அவர் கைது செய்யலாம் (குறுக்கீடுகள்) கைது செய்யலாம். காலம், காலமாக இருந்து வருகிற ஒன்றைத்தான் நான் சொல்லி இருக்கிறேன். (குறுக்கீடுகள்) இதற்குமேல் இதை நான் அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். போராட்ட காலங்களில் முன்னோடியாகக் கைது செய்வது என்பது நடைமுறைதான். (குறுக்கீடுகள்) நான் இதில் பேச அனுமதிக்கவில்லை, நான் ஏன் அனுமதிக்கவில்லை என்பதற்குத்தான் சொன்னேன். (குறுக்கீடுகள்) அதற்கான விளக்கத்தை நான் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) விவாதத்திற்கு ஏன் அனுமதிக்கவில்லை என்பதை இப்போது சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) நான் அதற்குத்தான் சொன்னேன். ஏற்கெனவே இப்படிப்பட்ட தீர்ப்பு சொல்லப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) ஏற்கெனவே இப்படிப்பட்ட தீர்ப்பு இங்கே வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத்தான் நான் சொன்னேன். (குறுக்கீடுகள்) இங்கே அனுமதி இல்லாத பிரச்சினையை எழுப்பக்கூடாது. (குறுக்கீடுகள்) உட்காரவேண்டும். நான் அனுமதிக்காமல் இருப்பதை நீங்கள் எப்படிக் கேட்க முடியும்? (குறுக்கீடுகள்) நான் ஏன் அனுமதிக்கவில்லை என்பதற்கு இங்கே விளக்கம் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. சி. ஞானசேகரன், என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டர்?

1995 மே 2]

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் கொடுத்திருக்கிற இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு, தாங்கள் அளித்திருக்கக்கூடிய காரணம் சட்டம் ஒழுங்குப் பிரச்சினையாதலால் இதை நான் அனுமதிக்க முடியாது என்று சொல்லியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆமாம். நான் இப்போதும் சொல்லியிருக்கிறேன். இதேமாதிரி முடிவுதான் இதற்கு முன்னரும் எடுத்து இருக்கிறார்கள் என்பதையும் இப்போது சொல்லியிருக்கிறேன். அதற்குப் பிறகு நான் சொல்லியது பற்றி இங்கே விவாதிக்க முடியாது. எனவே இப்போது நீங்கள் கேட்டதில் எந்தவிதமான பாயின்ட் ஆஃப் ஆர்டரும் கிடையாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பரிதி இளம் வழுதி சிறப்பு கவன ஈர்ப்பு பற்றிப் பேசலாம் (குறுக்கீடுகள்) திரு. காளன், ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலையதில் நடந்த சம்பவம் பற்றி, இன்று இந்தப் பிரச்சினை எடுத்துக்கொள்ள இருப்பதால், நாளை, அல்லது நாளை மறுநாள் எடுத்துக்கொள்ளலாம். நீங்கள் இங்கே இருக்கும்போது எடுத்துக் கொள்ளலாம். இன்றைக்கு எடுத்துக்கொள்ளவில்லை. (குறுக்கீடுகள்) திரு. சி. ஞானசேகரன், நீங்கள் எழுப்பியது பாயின்ட் ஆஃப் ஆர்டர். இல்லை என்றவுடன் நீங்கள் உட்கார்ந்திருக்கவேண்டும். நீங்கள் இப்போது உட்காரவில்லை என்பதே முறைகேடான செயல். (குறுக்கீடுகள்) நீங்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் கேட்டவுடன் நான் அனுமதித்தேனா இல்லையா? கிளாரிபை செய்வதற்கு இப்போது முடியாது. (குறுக்கீடுகள்). நான் தெரிவித்த கருத்துக்களுக்கு அவர்கள் சொன்னார்கள் (குறுக்கீடுகள்) அவர்கள் சொன்னது, நான் தெரிவித்த கருத்துக்களுக்குத்தான் (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-35

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் செல்வராசன் அவர்களும், தம்புசாமி அவர்களும், பரிதி இளம்வழுதி அவர்களும் எழுந்து நின்று இவ்வளவு நேரமாக தங்களைப் பார்த்து நாங்கள் எல்லாம் ஏதோ பெரிய வன்முறைச் சம்பவங்களை ஏற்படுத்தத் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள், இது அநியாயம், அப்படி நாங்கள் எதுவுமே திட்டமிடவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் கேட்கிறேன், இவர்களுக்கெல்லாம் தலைமையேற்று இருக்கிற ஒரு தலைவர் வெளிப்படையாகவே அறிவுரை கூறுகிறார், அறிக்கை விடுகிறார், என் கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் தலைமறைவாகி விடுங்கள் என்று. (மேசையைத் தட்டும் ஒலி) 4-ஆம் தேதி வெளியே வந்து வன்முறையில்

ஈடுபடுங்கள் என்று சொல்வதாகத்தானே அர்த்தம். இப்பொழுது எல்லோரும் தலைமறைவாகிவிடுங்கள், 4-ஆம் தேதி வெளியே வாருங்கள் என்றால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன். அரசுக்குக் கிடைத்த தகவல்களை நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பரிதி, முறைகேடாக நடக்கக் கூடாது (குறுக்கீடுகள்) இதிலே முறைகேடாகவெல்லாம் நடக்கக் கூடாது (குறுக்கீடுகள்) நான் அனுதிக்காமலேயே நீங்கள் பேசிக் கொண்டிருந்தீர்கள். முதலமைச்சரும் பதில் சொல்கிறார்கள்.

4. சிறப்புக் கவன ஈர்ப்பு

சேப்பாக்கம் தொகுதி லாக் நகரில் சிலரால் திருமதி புவனேஸ்வரி என்ற பெண் தாக்கப்பட்டது குறித்து. (பேரவைப் பணிகளினின்றும் உறுப்பினர் திரு. இளம்வழுதி தற்காலிகமாக நீக்கி வைக்கப்பெற்றது உள்பட)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பரிதி, புவனேஸ்வரி தாக்கப்பட்ட அந்தப் பிரச்சினையை மட்டும் நீங்கள் இங்கே எழுப்புவதாக இருந்தால், எழுப்பலாம். (குறுக்கீடு) அந்தப் பிரச்சினைக்குத்தான் அவரை அனுமதித்திருக்கிறேன். அவர் அறிவிப்புக் கொடுத்திருக்கிற பிரச்சினையை மட்டும் எழுப்புவதாக இருந்தால் எழுப்பலாம்.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வெள்ளிக்கிழமையன்று நான் கொடுத்திருந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றி (குறுக்கீடு) கடந்த வெள்ளிக்கிழமை நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருந்தேன். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வினைக் குறித்து பேரவையியின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கோரி ஒரு தீர்மானத்தை வெள்ளிக்கிழமை அன்று கொடுத்திருந்தேன். அதை நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன் என்று சொன்னீர்கள். மறுநாள் லீவு, எனவே அதை இன்றைக்கு எடுத்திருக்கிறீர்கள். அதனுடைய சாரத்தை இங்கே பேசுவதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வியாழக்கிழமை இரவு (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவரைப் பேச அனுமதித்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) பரிதி இளம்வழுதிக்கு நான் அனுமதி